**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**அசல் வழக்கு எண். 41 /2023**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் புதன் கிழமை
வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எம்.மகேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுப்பிரமணியன் | த/பெ.: | அன்பழகன் |
| கிராமம்: | முத்துப்பேட்டை | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 44 | முகவரி: | முத்துப்பேட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 04.03.2026.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வாதி குடும்பத்தினர் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. நண்பர்கள். எனக்கு யாரு நண்பர் என்றால் விவேகானந்தன். எத்தனை வருடம் விவேகானந்தன் எனக்கு நண்பன் என்றால் முத்துப்பேட்டையில் உள்ள அரசு பள்ளியில் 8ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை ஒன்றாக படித்தோம். எனக்கு விவேகானந்தன் என்பவரை 13 வயதிலிருந்து நண்பர் என்றால் சரிதான். விவேகானந்தனுக்கு நான் நண்பன் என்பதனால் சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் நானும், விவேகானந்தனும் சேர்ந்து பார்ட்னராக நாச்சிகுளத்தில் ேஹாட்டல் வைத்து வியாபாரம் செய்து வந்தோம். நான் கடந்த 2013–ம் ஆண்டு முதல் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தை இடிக்கும் வரை தொழில் செய்து வந்தோம். அதன் பிறகு கட்டிடத்தை இடித்து விட்டதால் அங்கிருந்து சென்றுவிட்டோம். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு சரியாக தெரியுமா என்றால் தெரியாது. அதன் நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த தாவா சொத்து யாருக்கு சொந்தமானது, யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் இராமூர்த்தி என்பவர் பெயரில் உள்ளது. தாவா சொத்து ராமமூர்த்திக்கு எப்படி கிடைத்தது என்றால் அக்ரிமெண்ட் போடப்பட்டதாக சொன்னார்கள். ஆனால் எப்போது போடப்பட்டது என்றால் 1987–ல். யாரிடம் இருந்து ராமமூர்த்தி என்பவர் அக்ரிமெண்ட் போட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்து அரசுக்கு சொந்தமான நீர்நிலை புறம்போக்கு என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தற்போது 44 வயது. எனக்கு சிறு வயதில் இருக்கும்போது தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் சரிதான். வாதி விவேகானந்தன் எனக்கு நண்பர் என்பதால் அவர் சொன்னதின் அடிப்படையில் கடந்த 40 ஆண்டுகளாக தாவா சொத்து அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விவேகானந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம்

தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற வழிகாட்டுதல் படியும், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்துறை , பொதுப்பணிதுறை ஆகியோர்களின் உத்தரவுப்படி நீர்நிலை புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிய விவரம் தெரியும், அப்போது தான் தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றினார்கள். சொத்து விவரம் பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றும், விவேகானந்தன் கேட்டுக்கொண்டதன்படி அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சட்டத்திற்கு உட்பட்டு முறையாக தாவா சொத்து உட்பட மற்ற சொத்துக்களையும் வருவாய்துறை அதிகாரிகள் அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை :– இல்லை</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.